மகளிருக்கு கட்டணமில்லா பயண விரிவாக்கத் திட்டம்: அக். 2-இல் முதல்வர் விஜய் தொடங்கிவைக்கிறார்

தினமும் 84 லட்சம் பேர் பயன்பெறுவர்

சென்னை, செப். 21: மாநகர, நகர்ப்புற பகுதிகளில் இயங்கும் அரசு எக்ஸ்பிரஸ், எல்எஸ்எஸ், டீலக்ஸ் மற்றும் புறநகர் சாதாரண பேருந்துகளிலும் மகளிர் கட்டணமில்லாமல் பயணிக்கும் வகையில் விரிவுபடுத்தப்பட்ட வெற்றிப் பயணத் திட்டத்தை முதல்வர் ச.ஜோசப் விஜய் அக்.2-இல் தொடங்கி வைக்கிறார்.

மகாத்மாக காந்தி பிறந்த தினமான அக். 2-ஆம் தேதிமுதல் வெற்றிப் பயணம் திட்டம் செயல்படுத்தப்படும் என்று பேரவையில் 110 விதியின்கீழ் முதல்வர் விஜய் ஏற்கெனவே அறிவித்திருந்தார். அதைச் செயல்படுத்துவதற்கான முன்னேற்பாடுகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் முதல்வர் ஜோசப் விஜய் தலைமையில் தலைமைச் செயலகத்தில் திங்கள்கிழமை நடைபெற்றது.

தற்போது, 7 அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் நகர சாதாரண பேருந்துகள் மற்றும் 40 கி.மீ. வரையிலான மலைப் பகுதி சாதாரணப் பேருந்துகளில் மகளிர் கட்டணமின்றி பயணம் செய்து வருகின்றனர். 'வெற்றிப் பயணம்' திட்டத்தின் மூலம் இச்சேவை மாநகர, நகர்ப் பகுதிகளில் இயங்கும் எக்ஸ்பிரஸ், எல்எஸ்எஸ், டீலக்ஸ் அரசுப் பேருந்துகள், புறநகர் சாதாரண பேருந்துகள் மற்றும் 40 கி.மீ.க்கு மேற்பட்ட மலைப் பகுதி சாதாரண பேருந்துகள் ஆகியவற்றுக்கும் விரிவுபடுத்தப்பட்டு, மொத்தமாக 12,692 பேருந்துகள் இத்திட்டத்தின்கீழ் கொண்டுவரப்படவுள்ளன.

சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் ச.ஜோசப் விஜய் தலைமையில் திங்கள்கிழமை 'வெற்றிப் பயணம் திட்டத்தின் முன்னேற்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டத்தில் போக்குவரத்துத் துறை அமைச்சர் ஆ.விஜய் தமிழன் பார்த்திபன், தலைமைச் செயலர் மு.சாய்குமார், நிதித் துறைச் செயலர் மு.அ.சித்திக், போக்குவரத் துறைச் செயலர் இல.நிர்மல்ராஜ், மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் வீ.ப.ஜெயசீலன்.

இதன்மூலம், 7 அரசுப் போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படும் மொத்த 18,413 திட்டமிடப்பட்ட பேருந்துகளில் 12,692 பேருந்துகள் (69 சதவீதம்), மொத்த 1,94,649 நடைகளில் (ஒற்றை) 1,65,312 நடைகள் (85 சதவீதம்) இயக்கப்படும். தினமும் சுமார் 84.32 லட்சம் மகளிர் இத்திட்டத்தின்மூலம் பயன்பெறுவார்கள்.

மேலும், 'வெற்றிப் பயணம்' பேருந்துகளின் மின்னணு பயணச்சீட்டு இயந்திரங்களுடனான இணைப்புப் பணி நிறைவடைந்துள்ளது. சோதனை மற்றும் சரிபார்ப்புப் பணிகள் செப். 25-ஆம் தேதிக்குள்ளும், சோதனை ஓட்டம் செப். 27-ஆம் தேதியும் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தை முதல்வர் விஜய் அக். 2-இல் தொடங்கி வைக்கவுள்ளார்.

இத்திட்டத்தால் மாணவிகள் தொலைதூரத்தில் உள்ள கல்லூரிகளுக்குச் செல்லவும், மகளிர் தங்கள் பணியிடங்களுக்குச் செல்லவும், மருத்துவம் மற்றும் அத்தியாவசியச்சேவைகளுக்கும் கட்டணமின்றி பேருந்துகளில் பயணிக்க இயலும்.

மதுராந்தகம் மற்றும் தாராபுரம் சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டு, தேர்தல் நடத்தை விதிமுறைகள் நடைமுறையில் உள்ளதால், செங்கல்பட்டு மற்றும் திருப்பூர் மாவட்டங்களுக்கு தேர்தல் நடத்தை விதிமுறைகள் விலக்கிக் கொள்ளப்பட்ட பிறகு இத்திட்டம் செயல்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில், போக்குவரத்துத் துறை அமைச்சர் ஆ.விஜய் தமிழன் பார்த்திபன், தலைமைச் செயலர் மு.சாய்குமார், நிதித் துறை கூடுதல் தலைமைச் செயலர் மு.அ.சித்திக், போக்குவரத்துத் துறைச் செயலர் இல.நிர்மல்ராஜ், மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் வீ.ப. ஜெயசீலன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

நீட் எதிர்ப்பு இயக்கத்துக்கு ஆதரவாக மு.க.ஸ்டாலின் கையொப்பம்

சென்னை, செப். 21: எண்ம முறையில் நடத்தப்படும் 'நீட்டை தடை செய்' இயக்கத்துக்கு ஆதரவாக திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் கையொப்பமிட்டார்.

சென்னை அண்ணா அறிவாலயத்தில், மு.க.ஸ்டாலினை, 'நீட் எதிர்ப்புக் கூட்டியக்கம் - தமிழ்நாடு' அமைப்பின் நிர்வாகிகள் திங்கள்கிழமை சந்தித்தனர். நீட் தேர்வை ரத்து செய்ய வலியுறுத்தி தாங்கள் மேற்கொண்டுவரும் செயல்பாடுகள் மற்றும் அடுத்தகட்ட முயற்சிகள் குறித்து கூட்டியக்கத்தினர் விளக்கி, அவரது ஆதரவைக் கோரினர்.

குறிப்பாக, நீட் எதிர்ப்பைத் தமிழ்நாட்டைக் கடந்து தேசிய அளவில் வலுப்படுத்தும் வகையில் 'நீட்டை தடை செய்' இணையவழிக் கையொப்ப இயக்கத்தை முன்னெடுப்பது, நீட் தேர்வை ரத்து செய்ய வலியுறுத்தும் விழிப்புணர்வுக் காணொலியை வெளியிடுவது, சமூக வலைதளங்கள் மூலம் பரப்புரை மேற்கொள்வது, அரசியல் கட்சிகள், மாணவர் அமைப்புகள், சமூக இயக்கங்கள் மற்றும் கல்வி உரிமைக்காகக் குரல் கொடுக்கும் அமைப்புகளை ஒருங்கிணைப்பது உள்ளிட்ட தங்களது செயல்பாடுகள் குறித்து எடுத்துச் சொல்லி ஆதரவு கோரினர்.

நீட் எதிர்ப்பு கூட்டியக்கம்- தமிழ்நாடு முன்னெடுக்கும் முயற்சிகளுக்கு ஆதரவு தெரிவித்த ஸ்டாலின், 'நீட்டை தடை செய்' இயக்கத்துக்கு ஆதரவாக கையொப்பமிட்டார்.

தவெக நட்சத்திர பேச்சாளர்கள் பட்டியலில் இருந்து வைகோ, தொல்.திருமாவளவன் பெயர்கள் நீக்கம்

சென்னை, செப்.21: தவெக நட்சத்திரப் பேச்சாளர்கள் பட்டியலில் இருந்து மதிமுக பொதுச் செயலர் வைகோ, தமிழக காங்கிரஸ் தலைவர் மாணிக்கம் தாகூர், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன், ஐயுஎம்எல் தேசியத் தலைவர் காதர் மொகிதீன் ஆகியோரின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன.

மதுராந்தகம் (தனி) தாராபுரம் (தனி) சட்டப் பேரவைத் தொகுதிகளுக்கான இடைத் தேர்தல் வரும் அக். 6-ஆம் தேதி நடைபெறவுள்ளது.

இந்தத் தொகுதிகளில் பிரசாரம் மேற்கொள்வதற்கான தவெக நட்சத்திர பேச்சாளர்கள் பட்டியலை தேர்தல் ஆணையம் வெளியிட்டது. இதில், தவெக கூட்டணிக் கட்சிகளின் தலைவர்களான மாணிக்கம் தாகூர், வைகோ, தொல்.திருமாவளவன், காதர் மொகிதீன் ஆகியோரின் பெயர்களும் இடம் பெற்றிருந்தன.

இதற்கு திமுக, அதிமுக உள்ளிட்ட பல்வேறு கட்சிகள் கண்டனம் தெரிவித்தன.

இந்நிலையில், தவெக நட்சத்திரப் பேச்சாளர்கள் பட்டியலிலிருந்துகூட்டணி கட்சிகளின் தலைவர்கள் பெயர்கள் நீக்கம் செய்யப்பட்டுள்ளன.

இப்புதிய பட்டியலை தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது. அதில் தவெக நட்சத்திரப் பேச்சாளர்கள் பட்டியலில் இருந்து மாணிக்கம் தாகூர், வைகோ, தொல்.திருமாவளவன், காதர் மொகிதீன் ஆகியோரது பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன.

புதிய தலைமைச் செயலக அரசாணை முதல்வருக்கு தெரியாமல் வெளியானது எப்படி?

அமைச்சர் ஆதவ் அர்ஜுனாவுக்கு பெ. சண்முகம் கேள்வி

சென்னை, செப்.21: பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச் செயலகம் அமைப்பது குறித்து முதல்வர் இறுதியான முடிவெடுக்கவில்லை என்று அமைச்சர் ஆதவ் அர்ஜுனா கூறிவரும் நிலையில், முதல்வருக்கு தெரியாமல் புதிய தலைமைச் செயலக இடம் குறித்த அரசாணை வெளிவந்தது எப்படி? என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம் கேள்வி எழுப்பியுள்ளார்.

சென்னையில் திங்கள்கிழமை செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: சென்னை பட்டினப்பாக்கத்தில் தலைமைச் செயலகம் அமைப்பது குறித்து முதல்வர் இறுதியான முடிவெடுக்கவில்லை என அமைச்சர் ஆதவ் அர்ஜுனா கூறியுள்ளார். பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச் செயலகம் அமைக்கும் அரசின் முடிவையே அரசாணை வெளிப்படுத்துகிறது. அந்த அரசாணை முதல்வருக்கு தெரியாமல் வெளிவந்தது என்றால், அதற்கு காரணமான அதிகாரி மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தவெக இல்லாமல் யார் ஆட்சியில் இருந்தாலும், இதே கோரிக்கையை நாங்கள் வைத்திருப்போம். இது தவெகவுக்கு எதிரான போராட்டம் அல்ல. சென்னையில் பல இடங்கள் இருக்கும் போது பிடிவாதமாக மீனவர்களை வெளியேற்றி, அங்கே தலைமைச்செயலகம் அமைப்பது என்பது தவறானது.

நாங்கள் கடந்த திமுக ஆட்சியிலும் சாம்சங் தொழிலாளர்கள் போராட்டம் உள்ளிட்ட பல போராட்டங்களை கடுமையாக முன்னெடுத்தோம், சட்டப்பேரவையிலும் முன்வைத்தோம். நாங்கள் முன்வைக்கும் கோரிக்கைகள் நியாயமானதா என்று பார்க்க வேண்டும்.

திமுக ஆட்சியின் ஊழல் தொடர்பான 3 கோப்புகள் தனது மேஜையில் உள்ளது என்று முதல்வர் விஜய் தொடர்ந்து கூறி வருகிறார். அவர்கள் கையில் உள்ள ஆதாரங்கள் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கும் இடத்தில் இருப்பவர்கள் எங்களைப் பார்த்து ஏன் கேள்வி எழுப்புகிறார்கள்?' என்றார் அவர்.

இடைத்தேர்தல் பணிகளுக்காக மதிமுக பொறுப்பாளர்கள் நியமனம்

சென்னை, செப்.21: மதுராந்தகம் (தனி), தாராபுரம் (தனி) தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் பணிக்காக மதிமுக சார்பில் பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இது குறித்து மதிமுக பொதுச் செயலர் வைகோ வெளியிட்ட அறிக்கை:

இந்த இரு பேரவைத் தொகுதிகளுக்கு வரும் அக். 6-ஆம் தேதி இடைத்தேர்தல் நடைபெறவுள்ளது. தேர்தல் பணிகளுக்காக மதிமுக சார்பில் தலைமைக் கழக பொறுப்பாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். அதன்படி, தாராபுரம் தொகுதிக்கு மதிமுக துணைப் பொதுச் செயலர் புதூர் மு.பூமிநாதனும், மதுராந்தகம் தொகுதிக்கு மதிமுக துணைப் பொதுச் செயலர் சு.ஜீவனும் நியமிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

RELIGARE ரெலிகேர் பின்வெஸ்ட் லிமிடெட் (RELIGARE FINVEST LTD.)

CIN:U74999DL1995PLC064132

பதிவு அலுவலகம்: 'முதல் தளம், அலுவலக எண்.101, 2E/23, ஜான்டேவலன் விரிவு, புதுதில்லி - 110055 **கிளை அலுவலகம்:** எண்.421/G, முதல் தளம், 1வது மெயின் ரோடு, 1வது ஸ்டேஜ், இந்திராநகர், கிருஷ்ணா கோயில் சாலை, SBI கிளை எதிரில், பெங்களூரு-560038

APPENDIX-IV-A [See proviso to Rule 8(6) & proviso to Rule 9(1)]

அசையா சொத்துக்களின் விற்பனைக்கான அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச்சட்டம் 2002, பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண்.8(6) & 9(1)-ன் கீழ் அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களை விற்பனை செய்தல்.

ரெலிகேர் பின்வெஸ்ட் லிமிடெட் (சுருக்கமாக 'RFL'), நிறுவனத்தில் அடமானத்தில் வைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட சொத்துக்களை ரெலிகேர் பின்வெஸ்ட் லிமிடெட் நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் **அடையாளபூர்மான சுவாதீனத்தில் (Symbolic Possession)** எடுக்கப்பட்டு **கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்கள் / அடமானதாரர்கள் 1)AVS கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், 2) S.யுவராஜ், 3) S.சுந்தரய்யா, 4) சந்திரய்யா கான்ட்ராக்டர், 5) C.ஸ்வர்ணா** ஆகியோரிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய கடன்தொகையான **21.09.2026** அன்றுள்ளபடி **₹ 10,50,12,190.30** (ரூபாய் பத்து கோடியே ஐம்பது லட்சத்து பன்னிரெண்டாயிரத்து நூற்று தொண்ணூறு மற்றும் பைசா முப்பது மட்டும்) மற்றும் வட்டி, இதர செலவுகளை வசூலிப்பதற்காக கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்களை **"உள்ள இடத்தில் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு" மற்றும் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே" மற்றும் "புகார்கள் ஏற்கப்படமாட்டாது"** என்ற அடிப்படையில் இ-ஏலம் **"Online Electronic Bidding"** மூலம் **https://www.bankeauctions.com/** என்ற இணையதளத்தில் **22.10.2026** அன்று காலை 10.30 மணி முதல் 11.30 மணி வரை ஒவ்வொரு 5 நிமிட கால இடைவெளியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் பொது மக்களுக்கும் மற்றும் குறிப்பாக கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

அசையா சொத்துக்கள் விவரம்

ஐட்டம் எண்.1: கிருஷ்ணகிரி பதிவு மாவட்டம் மற்றும் கெலமங்கலம் சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட, **மதிகிரி கிராமம், ஒசூர் தாலுகா, கிருஷ்ணகிரி மாவட்டம்.**

I. சர்வே எண்.802/1, புஞ்சை பரப்பு ஹெக்டேர் 0.45.0, தீர்வை ரூ.2.22np, தற்போது பாகம் பிரிக்கப்பட்டு சர்வே எண்.802/1A1-ல் உள்ள புஞ்சை பரப்பு ஹெக்டேர் 0.08.0, தீர்வை ரூ.0.40np, மொத்த பரப்பு ஏக்கர் 0.20 செண்ட்;

II. சர்வே எண்.799/4-ல் உள்ள புஞ்சை பரப்பு ஹெக்டேர் 0.51.0, தீர்வை ரூ.2.52np, தற்போது பாகம் பிரிக்கப்பட்டு சர்வே எண். 799/4B, புஞ்சை பரப்பு ஹெக்டேர் 0.32.5, தீர்வை ரூ.1.61np, மொத்த பரப்பு ஏக்கர் 0.80 செண்ட் அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். மேலே உள்ள சொத்தானது குடியிருப்பு வீட்டு மனைகளாக மாற்றப்பட்டு இதில்..

A. சர்வே எண்.802/1A1, தற்போது பாகம் பிரிக்கப்பட்டு சர்வே எண்.802/1A1C-ல் உள்ள புஞ்சை பரப்பு ஹெக்டேர் 02.20, தீர்வை ரூ.0.11NP. **மனை எண்.2-ல் உள்ள நிலத்தின்** பரப்பு 2,398 சதுர அடி அல்லது 0.05½ செண்ட், அதனுடன் அனைத்து ரோடுகளின் பொது உரிமைகள் மற்றும் அதனுடன் **RCC கட்டிடத்தின் மொத்த பரப்பு 2,200 சதுர அடி அல்லது 205 சதுர மீட்டர்,** அதனுடன் அனைத்து கதவுகள், ஜன்னல்கள், மின்சார பொருத்துதலின் சேவை இணைப்பு எண்.070-009-1756, தண்ணீர் இணைப்புகள் பொருத்துதல்கள் மற்றும் இதர உதிரி பாகங்கள் போன்றவை.

B. சர்வே எண்.799/4B, தற்போது பாகம் பிரிக்கப்பட்டு சர்வே எண்.799/4B3-ல் உள்ள புஞ்சை பரப்பு ஹெக்டேர் 0-3.60, தீர்வை ரூ.0.18NP, **மனை எண்.5-ல் உள்ள நிலத்தின் பரப்பு 3,924 சதுர அடி அல்லது ஏக்கர் 0.09 செண்ட்.**

C. சர்வே எண்.799/4B, தற்போது பாகம் பிரிக்கப்பட்டு சர்வே எண்.799/4B5-ல் உள்ள புஞ்சை பரப்பு ஹெக்டேர் 0-2.00, தீர்வை ரூ.0.10NP, **மனை எண்.6A-ல் உள்ள நிலத்தின் பரப்பு 2,180 சதுர அடி அல்லது ஏக்கர் 0.05 செண்ட்.**

D. சர்வே எண்.799/4B, தற்போது பாகம் பிரிக்கப்பட்டு சர்வே எண்.799/4B4-ல் உள்ள புஞ்சை பரப்பு ஹெக்டேர் 0-1.60, தீர்வை ரூ.0.10NP, **மனை எண்.6B-ல் உள்ள நிலத்தின் பரப்பு 1,744 சதுர அடி அல்லது ஏக்கர் 0.04 செண்ட்.**

E. சர்வே எண்.799/4B, தற்போது பாகம் பிரிக்கப்பட்டு சர்வே எண்.799/4B8-ல் உள்ள புஞ்சை பரப்பு ஹெக்டேர் 0-3.60, தீர்வை ரூ.0.18NP, **மனை எண்.7-ல் உள்ள நிலத்தின் பரப்பு 3,924 சதுர அடி அல்லது ஏக்கர் 0.09 செண்ட்.**

F. சர்வே எண்.799/4B, தற்போது பாகம் பிரிக்கப்பட்டு சர்வே எண்.799/4B9-ல் உள்ள புஞ்சை பரப்பு ஹெக்டேர் 0-10.90, தீர்வை ரூ.0.54NP, **மனை எண்.8-ல் உள்ள நிலத்தின் பரப்பு 11,772 சதுர அடி அல்லது ஏக்கர் 0.27 செண்ட்.**

ஐட்டங்களின் மொத்த பரப்பு 25,942 சதுர அடி அல்லது ஏக்கர் 0.59½ செண்ட். எல்லைகள்: கிழக்கு: ரோடு மற்றும் விற்பனையாளருக்கு சொந்தமான ஒப்புதல் மனை எண்.42 மற்றும் தனியார் சொத்து, மேற்கு: சர்வே எண்கள்.799/2B, 799/2A & 799/1C-ல் உள்ள நிலம், வடக்கு: சர்வே எண்கள்.799/4B2 & 802/1A1B-ல் மற்றவர்களுக்கு சொந்தமான நிலம், தெற்கு: சர்வே எண்கள்.800 & 802/2A-ல் தனியாருக்கு சொந்தமான நிலம். நிலத்தின் **மொத்த பரப்பு 25,942 சதுர அடி அல்லது ஏக்கர் 0.59½ செண்ட்** (இருபத்து ஐந்து லட்சத்து தொள்ளாயிரத்து நாற்பத்து இரண்டு சதுர அடி அல்லது ஐம்பத்து ஒன்பது மற்றும் பாதி செண்ட்)

ஐட்டம் எண்.2: கிருஷ்ணகிரி பதிவு மாவட்டம், கெலமங்கலம் சார் பதிவு மாவட்டம் மற்றும் ஒசூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட, **மதிகிரி கிராமம், ஒசூர் தாலுகா, கிருஷ்ணகிரி மாவட்டம்,** சர்வே எண்.799/4-ல் உள்ள புஞ்சை பரப்பு ஹெக்டேர் 0.51.0, தீர்வை ரூ.2.52 NP (ஏக்கர் 1.26 செண்ட்) புதிய சப் டிவிஷன் சர்வே எண்.799/4-B-ல் மொத்தமுள்ள பரப்பு ஹெக்டேர் 0.32.5, தீர்வை ரூ.1.61 np, (ஏக்கர் 0.80 செண்ட்), இவை பல்வேறு வீட்டு மனைகள் கொண்ட லேஅவுட்டாக மாற்றப்பட்டு, இதில் **மனை எண்.4-ல் உள்ள நிலத்தின் பரப்பு 3924 சதுர அடி அல்லது ஏக்கர் 0.09 செண்ட்,** எல்லைகள்: கிழக்கு: 20 அடி பொது ரோடு, மேற்கு: சர்வே எண்.799/2B மற்றும் 799/2A, வடக்கு: மனை எண்.3, தெற்கு மனை எண்.5.

ஐட்டம் எண்.3: கிருஷ்ணகிரி பதிவு மாவட்டம், கெலமங்கலம் சார் பதிவு மாவட்டம் மற்றும் ஒசூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட, **மதிகிரி கிராமம், ஒசூர் தாலுகா, கிருஷ்ணகிரி மாவட்டம்,** சர்வே எண்.802/1-ல் உள்ள புஞ்சை பரப்பு ஹெக்டேர் 0.45.0, தீர்வை ரூ.2.22 NP (ஏக்கர் 1.11 செண்ட்) புதிய சப் டிவிஷன் சர்வே எண்.802/1A1-ல் மொத்தமுள்ள பரப்பு ஹெக்டேர் 0.08.0, தீர்வை ரூ.0.40 np, (ஏக்கர் 0.20 செண்ட்), இவை பல்வேறு வீட்டு மனைகள் கொண்ட லேஅவுட்டாக மாற்றப்பட்டு, இதில் **மனை எண்.1-ல் உள்ள நிலத்தின் பரப்பு 2398 சதுர அடி அதனுடன் RCC தளம் கொண்ட கட்டிடம்,** அதனுடன் மின்சார சேவை இணைப்பு எண்.080 070 1755, எல்லைகள்: கிழக்கு: 24 அடி பொது ரோடு, மேற்கு: 20 அடி தனியார் ரோடு, வடக்கு: அதே சர்வே எண்ணில் உள்ள மீதமுள்ள நிலம், தெற்கு: மனை எண்.2 (தற்போது மேலே உள்ள நிலமானது பாகம் பிரிக்கப்பட்டு பட்டா எண்.4754-ன் கீழ் புதிய சப் டிவிஷன் சர்வே எண்.802/1A1B-ல் உள்ள பரப்பு 0.02.23)

ஐட்டம் எண்.4: கிருஷ்ணகிரி பதிவு மாவட்டம், கெலமங்கலம் சார் பதிவு மாவட்டம் மற்றும் ஒசூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட, **மதிகிரி கிராமம், ஒசூர் தாலுகா, கிருஷ்ணகிரி மாவட்டம்,** சர்வே எண்.801/1-A-ல் உள்ள புஞ்சை பரப்பு ஹெக்டேர் 0.27.0, தீர்வை ரூ.3.20 NP (ஏக்கர் 0.67 செண்ட்) புதிய சப் டிவிஷன் சர்வே எண்.801/1A1-ல் மொத்தமுள்ள பரப்பு ஹெக்டேர் 0.26.0, தீர்வை ரூ.1.28 np, (ஏக்கர் 0.64 செண்ட்), சர்வே எண்.802/2-ல் உள்ள புஞ்சை பரப்பு ஹெக்டேர் 0.04.5, தீர்வை ரூ.0.06 np, (ஏக்கர் 0.11 செண்ட்), புதிய சப் டிவிஷன் சர்வே எண்.802/2-B-ல் புஞ்சை பரப்பு ஹெக்டேர் 0.01.0, தீர்வை ரூ.0.06 np, (ஏக்கர் 0.02 செண்ட்).

ஐட்டம் எண்கள்.1 மற்றும் 2-ன் மொத்த பரப்பு ஏக்கர் 0.66 செண்ட், இவை பல்வேறு வீட்டு மனைகளாக மாற்றப்பட்டு **"மரநாத காலனி"** என பெயரிடப்பட்ட இந்த லேஅவுட்டானது நகர மற்றும் ஊரக திட்டமிடல் இயக்குநர், சேலம் அவர்களால் ஒப்புதல் வழங்கப்பட்டு அதன் ஒப்புதல் எண்.L.P.R. S.D.எண்.5/88, இதில் **மனை எண்.42-ல் உள்ள நிலத்தின் பரப்பு 3067 சதுர அடி.** எல்லைகள்: கிழக்கு: 24 அடி அகல ரோடு, மேற்கு: சர்வே எண்.799, வடக்கு: மனை எண்.43, தெற்கு: மனை எண்.41.

ஐட்டம் எண்.5: கிருஷ்ணகிரி பதிவு மாவட்டம், கெலமங்கலம் சார் பதிவு மாவட்டம் மற்றும் ஒசூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட, **மதிகிரி கிராமம், ஒசூர் தாலுகா, கிருஷ்ணகிரி மாவட்டம்,** சர்வே எண்.706/2A3-ல் உள்ள புஞ்சை பரப்பு ஹெக்டேர் 0.37.0, தீர்வை ரூ.1.02 np (ஏக்கர் 0.91 செண்ட்) மொத்தமுள்ள பரப்பு ஏக்கர் 0.24 மற்றும் பாதி செண்ட், தீர்வை ரூ.0.28np, எல்லைகள்: கிழக்கு: சர்வே எண்.706/2A/4A/2A-ல் உள்ள லக்ஷ்மண ராவ்-க்கு சொந்தமான நிலம், மேற்கு: அதே சர்வே எண்ணில் உள்ள நிலத்தின் பகுதி, வடக்கு: அதே சர்வே எண்ணில் உள்ள நிலத்தின் பகுதி, தெற்கு: சர்வே எண்.706/2B மற்றும் 706/2C (தற்போது மேல் உள்ள நிலத்தின் பகுதியின் புதிய சப் டிவிஷன் சர்வே எண்.706/2A3B-ல் உள்ள பரப்பு ஹெக்டேர் 0.20.0)

குறைந்தபட்ச கேட்பு விலை: ₹ 4,65,02,272/- மற்றும் டேவணித்தொகை (EMD): ₹ 46,50,227/-

இ-ஏல தேதி & நேரம் : 22.10.2026

காலை 10.30 மணியிலிருந்து 11.30 மணி வரை

Portal of E-Auction: https://www.bankeauctions.com/

தெரிந்த வில்லங்கங்கள்

விற்பனை செய்யப்படவுள்ள ஈடுபெற்ற சொத்தின் மீதான எந்தவொரு வில்லங்கமும் RFL-க்கு தெரியாது. விருப்பமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் சொத்து பற்றிய தனது சொந்த மதிப்பீட்டை தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம். கடன் வழங்கியவர் (RFL) மேற்குறிப்பிட்ட ஈடுபெற்ற சொத்தின் தகுதிக்கு எந்தவொரு உத்திரவாதமும் / பிரதிநிதித்துவமும் அளிக்கவில்லை.

விற்பனையின் பிற விபரங்கள்:

1. விற்பனை குறித்த விரிவான விபரங்களுக்கு பாதுகாக்கப்பட்ட கடனளித்த வங்கியின் இணையதளத்தில் பார்வையிடலாம்: https://uat-religarefinvests.webflow.io/auction-notices
2. இ-ஏலம் பற்றிய விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய நபர் M/s. C1 India Pvt. Ltd, Mr. தரணி கிருஷ்ணா – Tel. No.: +91 72919 71124,25,26 மற்றும் Mobile +91-99481 82222; email id – andhra@c1india.com.
3. விருப்பமுள்ள நபர்கள் விண்ணப்பம் / ஏலம் சமர்ப்பிக்கும் விபரங்கள் மற்றும் இதர விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய நபர்கள் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி Mr.அன்சர் B S, Mobile: 89290 24427 மற்றும் Mr.R.மனோஜ்குமார் Mob: 99404 46070

தேதி : 22.09.2026
இடம் : சென்னை

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, M/s.ரெலிகேர் பின்வெஸ்ட் லிமிடெட்

TMB தமிழ்நாடு மெர்க்கன்டைல் பேங்க் லிமிடெட்

(பதிவு அலுவலகம் 57, V.E.ரோடு, தூத்துக்குடி)

அதியமான்கோட்டை கிளை

1வது தளம் கதவு எண்.35/8, 36/3A1 சேலம் பிரதான சாலை, நல்லம்பள்ளி, அதியமான்கோட்டை - 636 807

பிற்சேர்க்கை IV-A (விதி 8(6) பார்க்கவும்)

அசையா சொத்துக்கான ஏல விற்பனை அறிவிப்பு

செக்யூரிட்டைசேஷன் அண்ட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் ஆஃப் ஃபைனான்சியல் அசெட்ஸ் அண்ட் என்ஃபோர்ஸ்மென்ட் ஆஃப் செக்யூரிட்டி இன்ட்ரஸ்ட் ஆக்ட் 2002 மற்றும் கடனீடுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம் 2002 விதிகள் 8(6) & 9(1)-ன் கீழ் அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கான ஏல விற்பனை அறிவிப்பு.

இதன்மூலம் பொதுவாக பொதுமக்களுக்கும் மற்றும் குறிப்பாக **கடன்தாரர் திரு. பழனிசாமி த/பெ. சின்னபூசாரி மற்றும் திருமதி.வெண்ணிலா க/பெ. பழனிசாமி** ஆகியோர்களுக்கு வழங்கப்படும் அறிவிப்பானது என்னவென்றால், கீழே குறிப்பிட்ட அசையா சொத்தானது மேற்சொன்ன கடன்தாரர் அவர்களுக்கு கடன் வழங்கிய தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி, அதியமான்கோட்டை கிளைக்காக (Secured Creditor) அடமானம்/சார்ஜ் அளிக்கப்பட்டு, வங்கியில் பெற்ற கடனை சரியாக கட்டாததால் தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி, சேலம் மண்டலம், இணம்பிள்ளை கிளைக்காக அதன் அங்கீகாரம் பெற்ற அதிகாரி அவர்களால் **ஆக்கப்பூர்வ சுவாதீனம்** எடுத்து அவற்றை **"எங்கு எப்படி உள்ளதோ" "உள்ளது உள்ளபடி" "அங்கு அப்படி அதே நிலையில்"** என்ற அடிப்படையில் தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி, அதியமான்கோட்டை கிளைக்கு **18.08.2026** அன்று வரை செலுத்த வேண்டிய கடன் பாக்கி தொகையான **ரூ.13,72,534.18 (ரூபாய் பதிமூன்று லட்சத்து எழுபத்து இரண்டாயிரத்து ஐநூற்று முப்பத்து நான்கு மற்றும் பைசா பதினெட்டு மட்டும்)** பின்வட்டி மற்றும் செலவுகளை சேர்த்து வசூலிப்பதற்காக **28.10.2026** அன்று ஏலம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஏல **நிர்ணயத்தொகை: ரூ.33,00,000/- (ரூபாய் முப்பத்து மூன்று லட்சம் மட்டும்) மற்றும் முன் வைப்பு தொகை: ரூ.3,30,000/- (ரூபாய் மூன்று லட்சத்து முப்பதாயிரம் மட்டும்).**

சொத்தின் விபரம்:

திருமதி.வெண்ணிலா க/பெ. பழனிசாமி, அவர்கள் பெயரில் உள்ள தருமபுரி பதிவு மாவட்டம், தருமபுரி மேற்கு சார்பதிவு அலுவலகத்திற்குட்பட்ட கதவு எண்.2/284, வார்டு எண்.9, சிவாடி கிராமம், சிவாடி பஞ்சாயத்து, நல்லம்பள்ளி தாலுகா, தருமபுரி மாவட்டம் - 636 807 என்ற முகவரியில் பழைய சர்வே எண்.396/4, புதிய சர்வே புல எண்.396/4A7-ன்படி 4.75 செண்ட் பரப்பளவு நிலம் மற்றும் அதில் கட்டப்பட்டுள்ள வீட்டு கட்டிடம் மற்றும் சகலமும். எல்லைகள்: வடக்கில்: பூஸ்குதி ஜானி நடைபாதை, தெற்கில்: குள்ளபெருமாள் அவர்களின் நிலம், கிழக்கில்: கோவிந்தன் அவர்களின் சொத்து, மேற்கில்: மலர் அவர்களின் நிலம்.

குறிப்பு: மேற்குறிப்பிட்ட சொத்து M/s. யோகலட்சுமி ஜெனரல் ஸ்டோர் - ன் உரிமையாளர் திரு.பழனிசாமி த/பெ.சின்னபூசாரி, கடன் கணக்கு எண்.498700060750023-ல் பெற்றுள்ள Over Draft கடன் வசதிக்கான பொது பிணைய சொத்தாகும் மற்றும் 31.08.2026 அன்று வரை உள்ள தற்போதைய நிலுவை தொகை ரூ.13,15,219/-

ஏலம் நடைபெறும் இடம்	தமிழ்நாடு மெர்க்கன்டைல் பேங்க் லிட், அதியமான்கோட்டை கிளை 1வது தளம் கதவு எண்.35/8, 36/1A1 சேலம் பிரதான சாலை, நல்லம்பள்ளி, அதியமான்கோட்டை - 636 807
ஏலம் நடைபெறும் தேதி & நேரம்	28.10.2026 அன்று காலை 11.30 மணி
ஏல நிர்ணயத்தொகை	ரூ.33,00,000/- (ரூபாய் முப்பத்து மூன்று லட்சம் மட்டும்)

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு ஈட்டுறுதி கடன்தாரரின் www.tmb.bank.in வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள இணைப்பை பார்வையிடவும்.

இடம் : சேலம்
தேதி : 18.09.2026

அங்கீகாரம் பெற்ற அதிகாரி, தமிழ்நாடு மெர்க்கன்டைல் பேங்க் லிட்., சேலம் மண்டலம் (அதியமான்கோட்டை கிளைக்காக)

கனரா வங்கி (Canara Bank) — சிறப்பு சொத்து மீட்பு மேலாண்மை கிளை II, சென்னை [7901]

எண்.9 & 10, சர் தியாகராய சாலை, தியாகராய நகர், சென்னை-17
தொலைபேசி எண். 9740145622
மின்னஞ்சல் : cb7901@canarabank.com

மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) & 9 உடன் கீழ் அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின்-ஏல விற்பனை அறிவிப்பு.

பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்களுக்கு மற்றும் ஜாமீன்தாரர்களுக்கு, குறிப்பாகவும் இதன் மூலம் அறிவிப்பது யாதெனில் கீழே விவரிக்கப்பட்ட வங்கியில் அடமானம் வைத்துள்ள அசையா சொத்துக்கள் மற்றும் கடன் வழங்கிய வங்கிக்கு கடனுக்காக ஈடுசெய்யப்பட்டுள்ள அசையா சொத்துக்களை கனரா வங்கி, சிறப்பு சொத்து மீட்பு மேலாண்மை கிளை II [7901]-ன் அதிகாரப்பூர்வ அதிகாரியால் ஆக்கப்பூர்வ / அடையாளபூர்வ / மெய்நிலை சுவாதீனம் செய்துள்ள சொத்துக்களை கடன்தாரர் / ஜாமீன்தாரர்கள் செலுத்த வேண்டிய பாக்கித் தொகைகளை வசூலிக்கும் பொருட்டு, "உள்ளது உள்ளபடி, உள்ளது உள்ளவாறு", மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு என்கிற அடிப்படையில் 12.10.2026 ஆம் தேதியன்று (காலை 11.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை) (5 நிமிட காலநீட்டிப்புடன் தொடர்ந்து நடைபெறும்) விற்பனை செய்யப்பட உள்ள மின் ஏல விற்பனை அறிவிப்பு இதன் மூலம் வெளியிடப்படுகிறது.

கடன்தாரர் பெயர் & முகவரி: 1) M/s Green O Care Engineering Pvt Ltd. பதிவு அலுவலகம்: எண்.55, முதல் தளம், காமராஜ் அவின்யூ, முதல் தெரு, கஸ்தூர்பா நகர், அடையார், சென்னை – 600020. **தொழிற்சாலை அலுவலகம்:** தொழிற்சாலை: சர்வே எண்.124/A2, சிறுநல்லூர் கிராமம், மதுராந்தகம் வட்டம், செங்கல்பட்டு மாவட்டம் – 603309 பிரதிநிதியாக அதன் இயக்குநர் (கள்) **2) திரு. V. கண்ணன்,** த/பெ. திரு. K. வெங்கட்ராமன், 95, தீர்த்தகிரி சாலை, சேலம் – 636001, தமிழ்நாடு. **3) திருமதி. K. ரேணுகா,** க/பெ. திரு. **V. கண்ணன்** J-303, இந்திரப்ரஸ்த் -5, பிரகலாத் நகர், HDFC வங்கி அருகில், அஹமதாபாத் – 380015, குஜராத், **4) திரு. V. கண்ணன், த/பெ.திரு.வெங்கட்ராமன்** ஃபிளாட் எண்.3A, எண்.35, வேங்கடரத்தினம் நகர், அடையார், சென்னை – 600020.

கடன் நிலுவைத் தொகை : 31.08.2026 அன்றுள்ளபடி ரூ. 44,20,77,559.70 (ரூபாய் நாற்பத்து நான்கு கோடியே இருபது இலட்சத்து எழுபத்து ஏழு ஆயிரத்து ஐநூற்று ஐம்பத்து ஒன்பது மற்றும் பைசா எழுபது மட்டும்) அதனுடன் பொருந்தக்கூடிய வட்டி.

சொத்தின் விவரங்கள்:

சொத்து 1: வகை: குடியிருப்பு மற்றும் தொழிற்சாலைக்கட்டிடம் சேலம் (கிழக்கு) பதிவு மாவட்டம், வாழப்பாடி சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன்பாளையம் வட்டம், வடுகத்தம்பட்டி கிராமம், சர்வே எண்:144/2B1B (1.10ஏக்கர்கள்), 144/2B2B (2.10ஏக்கர்கள்), (1.10 + 2.10 = 3.20 ஏக்கர்கள் அல்லது 139392சதுர அடி) இரண்டும் கலந்த நிலம் மற்றும் குடியிருப்பு / தொழிற்சாலைக் கட்டிடம் (RCC (தரை தளம்) 2857சதுர அடி + கல்லாஸ்பூம் ஷீட் (தரை தளம்) 18475சதுர அடி) கொண்ட சொத்து திரு. V. கண்ணன், இயக்குநர் அவர்களின் பெயரில் உள்ள சொத்து. **வகை எண்.1:** சர்வே **எண்.144/2B1B** இன் எல்லைகள்: வடக்கில்: வாகனப் பாதை / சாலை; தெற்கில்: திரு. அங்கன் மற்றும் பலரின் உரிமைப்பெற்ற நிலம்; கிழக்கில்: திருமதி. பார்வதி அவர்களின் உரிமைப்பெற்ற நிலம்; மேற்கில்: கீழே குறிப்பிடப்பட்ட வகை எண்.2; **வகை எண்.2:** சர்வே **எண்.144/2B2B** இன் எல்லைகள்: வடக்கில்: உமையாள்புரம் பச்சியம்மன் கோவிலுக்குச் செல்லும் வாகனப் பாதை /சாலை; தெற்கில்: திரு. இலட்சுமணன் மற்றும் பலரின் உரிமைப்பெற்ற நிலம்; கிழக்கில்: உண்ணாமலை அவர்களின் உரிமைப்பெற்ற நிலம் மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட வகை எண்.1; மேற்கில்: உண்ணாமலை அவர்களின் உரிமைப்பெற்ற நிலம் மற்றும் சர்வே எண்.144/2B2 இன் எஞ்சியுள்ள நிலம்;

குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித்தொகை	ஏலஉயர்வுத்தொகை
₹ 4,78,00,000/-	₹ 47,80,000/-	₹ 1,00,000/-

சொத்து 2: வகை: குடியிருப்புக் கட்டிடம் சேலம் கிழக்கு பதிவு மாவட்டம் மற்றும் சேலம் இணை-I சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, சேலம் மாநகராட்சி, அம்மாப்பேட்டை கிராமம், J-பிரிவு, 10வது வார்டு, பிளாக் எண்.11, வார்டு-AJ, T. சர்வே எண்.8/2 & 8/3, புதிய T.சர்வே எண்.8/2J & T.சர்வே எண்.8/3B இல் அடங்கிய கலந்த நிலம் (2520சதுர அடி) & மிஸ்டிரி சாலை, பாரதியார் 3வது தெரு, கதவு எண்.62/3 இல் கட்டப்பட்டுள்ள (தரை தளம் + முதல் தளம் + இரண்டாவது தளம் = 5035சதுர அடி) கட்டிடம், திரு. V. கண்ணன், இயக்குநர் அவர்களின் பெயரில் உள்ள சொத்து. **எல்லைகள்:** வடக்கில்: வார்டு AJ, பிளாக் -11, T.சர்வே எண்.8/2K & T.சர்வே எண்.8/3C இல் உள்ள திரு. மாணிக்க முதலியார் அவர்களின் உரிமைப்பெற்ற காலி நிலம்; தெற்கில்: வார்டு-AJ, பிளாக்-11, T.சர்வே எண்.8/2J இல் உள்ள திருமதி. விஜயலட்சுமி அவர்களின் உரிமைப்பெற்ற வீட்டுச் சொத்து மற்றும் வார்டு -AJ, பிளாக்-11, T.சர்வே எண். 8/3J இல் உள்ள திரு. கண்ணன் & திருமதி. சரஸ்வதி ஆகியோரின் உரிமைப்பெற்ற வீட்டுச் சொத்துக்கள்; கிழக்கில்: 15அடி அகல தெற்கு வடக்காக பொதுசாலை; மேற்கில்: கிழக்கு மேற்காக 3அடி அகல, தெற்கு வடக்காக வடிகால்வாய்;

குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித்தொகை	ஏலஉயர்வுத்தொகை
₹ 2,02,00,000/-	₹ 20,20,000/-	₹ 1,00,000/-

சொத்தினை பார்வையிடும் தேதி : 05.10.2026 நேரம் காலை 11 மணி முதல் மாலை 4 மணி வரை

டேவணித் தொகை செலுத்த கடைசி தேதி: விருப்பமுள்ள ஏலதாரர் குறைந்தபட்ச கேட்பு விலையில் 10% EMD டேவணித் தொகையினை M/s PSB Alliance Private Limited (baanknet) இன் இணையதளத்தில் நேரடியாக 12.10.2026 அன்று காலை 10 மணிக்குள் செலுத்த வேண்டும்.

மின் ஏல தேதி மற்றும் நேரம் 12.10.2026 காலை 11.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை (5 நிமிட காலநீட்டிப்புடன் தொடர்ந்து நடைபெறும்)

மின் ஏலம் பற்றிய விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கனரா வங்கியின் இணையதளத்தில் (www.canarabank.com) "E- Auction" இணைப்பில் தெரிந்து கொள்ளலாம் அல்லது கனரா வங்கி, சென்னை, சிறப்பு சொத்து மீட்பு மேலாண்மை கிளை II [7901], எண்.9 & 10, சர் தியாகராய சாலை, தியாகராய நகர், சென்னை-17, கைபேசி எண்.9740145622, மின்னஞ்சல் cb7901@canarabank.com மூலமாகவோ (அல்லது) (M/s PSB Alliance Pvt. Ltd), BAANKNET போர்டல், கைபேசி எண். 8291220220, மின்னஞ்சல் :support.BAANKNET@psballiance.com உதவி சேவை மையத்தை தொடர்பு கொள்ளலாம்.

Portal of E-Auction:https://baanknet.com

தேதி : 19.09.2026
இடம் : சென்னை

அதிகாரபூர்வ அதிகாரி, கனரா வங்கி

SOUTH INDIAN Bank EXPERIENCE NEXT-GEN BANKING

தி சௌத் இந்தியன் வங்கி லிட். பிராந்திய அலுவலகம்: கோயம்புத்தூர்

PB No. 3868, 1084/1-5, திருச்சி ரோடு, சங்கம், கோயம்புத்தூர்-18, தமிழ்நாடு. **இமெயில்:** ro1002@sib.co.in, **Tel:** 0422 2303618, **Website:** southindianbank.com, CIN: L65191KL1929PLC001017

இ- ஏல விற்பனை அறிவிப்பு

Ref: CBE/RO/REC/96/26-27 தேதி: 17.09.2026

நிதிச்சொத்துக்களின் பிணையம் மற்றும் மறுசீரமைப்பு மற்றும் பிணையநல அமலாக்க சட்டம் 2002-ன் கீழ், பிணைய நல (அமலாக்க) விதிகள் 2002-ல் கூறப்பட்டுள்ள விதி 8(6) மற்றும் 9(1)-ன்படி அசையா சொத்துக்களுக்கான இ-ஏல விற்பனை அறிவிப்பு.

கடன்தாரர்	உத்திரவாதி
1) திருமதி.T.சங்கீதா, M/s. SKI டிம்பர்ஸ் உரிமையாளர், 490, தீர்த்த கவுண்டர் தோட்டம், கொண்டப்பநாயக்கன்பட்டி, கன்னங்குறிச்சி, சேலம், தமிழ்நாடு-636008. மேலும் வசிப்பிடம்: 491, தீர்த்த கவுண்டர் தோட்டம், கொண்டப்பநாயக்கன்பட்டி, கன்னங்குறிச்சி, சேலம், தமிழ்நாடு-636008.	2) திரு.V.தங்கவேல், 491, தீர்த்த கவுண்டர் தோட்டம், கொண்டப்பநாயக்கன்பட்டி, கன்னங்குறிச்சி, சேலம், தமிழ்நாடு-636008.

தி சௌத் இந்தியன் வங்கி லிட்., சேலம் மெயின் கிளையில் (Secured Creditor) அடமானம் வைக்கப்பட்டு, தி சௌத் இந்தியன் வங்கி லிட்-ன் (Secured Creditor) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் அடையாள சுவாதீனம் செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை மேலே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்(கள்) மற்றும் உத்திரவாதி(கள்) ஆகியோர் 16.09.2026 தேதிப்படி தி சௌத் இந்தியன் வங்கி லிட்., சேலம் மெயின் கிளைக்கு (Secured Creditor) M/s.SKI டிம்பர்ஸ் கணக்கில் செலுத்த வேண்டிய தொகை ரூ.1,32,35,479.51 (ரூபாய் ஒரு கோடியே முப்பத்திரண்டு லட்சத்து முப்பத்தைந்தாயிரத்து நானூற்றி எழுபத்தொன்பது மற்றும் பைசா ஐம்பத்தொன்று மட்டும்) பின்வட்டி மற்றும் செலவினங்களுடன் வசூலிக்கும் பொருட்டு "அது இருக்கும் இடத்திலேயே", "என்ன உள்ளதோ அப்படியே","அது எந்த நிலையிலிருப்பினும்" என்ற அடிப்படையில் 23.10.2026 அன்று ஏல விற்பனை செய்யப்படும் என்று பொதுமக்களுக்கு குறிப்பாக கடன்தாரர் / உத்திரவாதிக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

சொத்தின் உரிமையாளர் பெயர்: **திருமதி. T.சங்கீதா**

சொத்து விபரம்: சேலம் மாவட்டம், சேலம் மேற்கு பதிவு மாவட்டம், சேலம் தாலுகா, கன்னங்குறிச்சி மிட்டா, கொண்டப்பநாயக்கன்பட்டி கிராமம், Sy. No. 138/ 2, Re. Sy. No. 138/ 2A, பட்டா எண். 117-ன் கீழ் அமைந்துள்ள 33850 சதுரடி அளவுள்ள இடம் மற்றும் அதன் அனைத்து பகுதிகளுடன், அதில் சுமார் 1401 சதுரடி மொத்த கட்டுமானப் பரப்புடைய கட்டிடத்துடன் பிற அனைத்து கட்டுமானங்கள், மேம்பாடுகள், தற்போதைய பயன்பாட்டு உரிமைகள், இணை கட்டுமானங்களுடன் சேர்த்து திருமதி.T.சங்கீதா என்பவருக்கு சொந்தமான இந்த சொத்து, 19.02.2004 தேதியில் பதிவுபெற்ற தானசெட்டில்மெண்ட் பத்திர எண். 483/2004-ல் மேலும் முழுவதுமாக விவரிக்கப்பட்டுள்ளது. இதன் எல்லைகள்: வடக்கே: பஞ்சாயத்து ரோடு, கிழக்கே: T.சங்கீதா மற்றும் S.முத்துக்குமார் ஆகியோரின் சொத்து, தெற்கே: செளபாக்யா நகரிலுள்ள சொத்து, மேற்கே: காந்திநகர்.

சுவாதீனத்தின் தன்மை	அடையாள சுவாதீனம்
நிர்ணயிக்கப்பட்ட தொகை	ரூ.4,08,45,000/- (ரூபாய் நான்கு கோடியே எட்டு லட்சத்து நாற்பத்தைந்தாயிரம் மட்டும்)
முன் வைப்புத் தொகை (EMD)	ரூ.40,84,500/- (ரூபாய் நாற்பது லட்சத்து எண்பத்து நான்காயிரத்து ஐநூறு மட்டும்) EMD 22.10.2026 அன்று மாலை 05:00 மணி அல்லது அதற்கு முன்போ செலுத்தப்பட வேண்டும்.
EMD/விற்பனைத் தொகையை சமர்ப்பிக்கும் முறை	EMD மற்றும் விற்பனை தொடர்பாக செலுத்த வேண்டிய அனைத்து தொகைகளும் "The Authorised Officer, The South Indian Bank Ltd." payable at Coimbatore என்ற பெயரில் Demand Draft-ஆகவோ அல்லது தி சௌத் இந்தியன் வங்கி லிட்., கோயம்புத்தூர்-திருச்சி ரோடு கிளையின் "அங்கீகாரம் பெற்ற அலுவலரால்" பராமரிக்கப்பட்டு வரும் (IFSC Code: SIBL0000385) கணக்கு எண். 0385073000000927-க்கு RTGS மூலமாகவோ செலுத்தப்பட வேண்டும்.
ஏல அதிகரிப்புத் தொகை	ரூ.50,000/- (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்).
இ-ஏல தேதி மற்றும் நேரம்	23.10.2026, 02:30 PM முதல் 03:30 PM வரை (விற்பனை முடியும் வரை 5 நிமிட வரம்பற்ற தன்நீட்சியுடன்).
வங்கிக்கு தெரிந்த வில்லங்கங்கள்	ஏதுமில்லை

விற்பனை பற்றிய விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, தி சௌத் இந்தியன் வங்கி லிட்.(Secured Creditor)-ன் இணையதளம் அதாவது www.southindianbank.com-ல் கொடுக்கப்பட்டுள்ள இணைப்பை பார்க்கவும். https://bankeauctions.com என்ற இணையதளத்திலும் விபரங்களை அறியலாம்.

சொத்து ஆய்வு, இ-ஏல நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் அல்லது ஏலங்களை சமர்ப்பித்தல் ஆகியவை பற்றி மேலும் விபரமாக அறிவதற்கு, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அல்லது தி சௌத் இந்தியன் வங்கி லிட்., சேலம் மெயின் கிளையில் வேலை நேரத்திலோ அல்லது திரு.P.மகாராஜா (Ph: 96007 83631) மற்றும் திரு.K.சக்கரவர்த்தி (Ph: 97905 56668) ஆகியோரை தொடர்பு கொள்ளவும்.

இடம்: கோயம்புத்தூர் அங்கீகாரம் பெற்ற அலுவலர்

கல்வி, வேலை வாய்ப்பு செய்திகளுக்கு... www.dinamani.com